# வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கு தேவையான உதவிகள் பற்றிய வழிகாட்டி

The Law Society

## எதிர்காலத்தை நினைத்து செயல்படுதல்

உங்களோடு சேர்ந்து வாழ்பவருடன் ஒரு வீட்டுக்கு குடிபோதல், அல்லது ஒரு புதிய வீடு வாங்குதல் என்பது மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயமாகத் தோன்றும் ஆனால் சட்டத்தின் பார்வையில் அது உருவாக்கக்கூடிய சில சிக்கல்களை சில ஜோடிகள் உணர்வதில்லை. இந்தக் காலத்திலா இப்படி என்று எண்ணத் தோன்றினாலும், மணம் முடித்தவர்களுக்கும், பதிவுசெய்துகொண்டு சேர்ந்து வாழ்பவர்களுக்கும் இருக்கும் உரிமைகள் மணமாகாமல் சேர்ந்து வாழும் ஜோடிகளுக்கு இல்லை என்பதே யதார்த்த நிலை. காமன் லா எனப்படும் வழக்கச் சட்டத்தின் கீழ் நடக்கும் கல்யாணங்கள் இப்போது பயன்பாட்டில் இல்லை. ஆனால் இவ்விஷயத்தை இந்த ஜோடிகள் உணர்வதற்குள் காலம் கடந்துவிடுகிறது, உறவு முறிந்துவிடவோ, ஜோடியில் ஒருவர் இறந்துபோகவோ செய்கிறார்கள். அது நடந்த பின்னர்தான் தங்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பு இல்லை என்பதை இவர்கள் உணர்கிறார்கள் என்பது துரதிருஷ்டம்.

நீங்கள் திருமணம் செய்துகொள்ளாமலோ அல்லது முறைப்படி பதிவுசெய்துகொள்ளாமலோ ஒருவருடன் சேர்ந்து வாழ்கிறீர்கள் என்றால் என்னென்ன விஷயங்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென இந்தப் பிரசுரம் எடுத்துரைக்கிறது.

ஒருவருடன் சேர்ந்து வாழ்வது என்று தீர்மானித்த பின்னர் கூடிய அளவு விரைவில் சட்ட ஆலோசனையை நீங்கள் பெற்று பின்வரும் விஷயங்களைத் தெரிந்துகொள்வது நல்லது:

- உங்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகள் யாவை;
- பல்வேறு சூழ்நிலைகளில் உங்களுடைய உங்களுடன் சேர்ந்து வாழ்பவருடைய நிலை என்ன; மற்றும்
- உங்களது நிலையை மேலும் மேம்படுத்த ஸ்திரப்படுத்த நீங்கள் என்ன செய்யலாம்.

## சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிதல்

உங்களுக்கென சட்டத்தரணி கிடையாது என்றால், www.lawsociety.org.uk/findasolicitor என்ற எமது இணையதளத்தில் 'Family' என்ற தலைப்பின் கீழ் உங்கள் வட்டாரத்தில் இருக்கும் சட்டத்தரணிகளைத் தேடவும். மாறாக 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

## சட்டத்தரணி தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் யாவை

சட்டத்தரணி ஒருவரை நீங்கள் நியமித்த பின்னர், உங்களது சூழ்நிலை குறித்து அவருக்கு விபரங்களை அவர் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பல்வேறு விஷயங்களை அவர் உங்களிடமிருந்து கேட்கலாம். பின்வருவ அவற்றில் அடங்கும்:

- உங்கள் இருவரிடையினால உறவின் தொடக்கம் முதலான விபரங்கள்;
- உங்களது மற்றும் உங்களோடு சேர்ந்து வாழ்பவரது உடைமைகள் மற்றும் சொத்துகளின் பட்டியல்;
- உங்களுக்கு வீடு சொந்தமாய் இருந்தால், அதன் விலை மதிப்பு என்ன, வீடு யாருடைய பேரில் இருக்கிறது;
- வீட்டின் மதிப்பில் உங்களுடைய மற்றும் சேர்ந்து வாழ்பவருடைய பங்களிப்பு என்ன (வீட்டில் நடந்த பழுதுபார்க்கும் வேலைகள் அடங்க)
- மற்ற சொத்துகள் உடைமைகளின் மதிப்பு;
- உங்களது வருமானம் மற்றும் சேர்ந்து வாழ்பவரது வருமானம்; மற்றும்
- உங்களிலிருவருக்குமோ உங்களில் எவருக்குமோ பிள்ளைகள் இருக்கிறார்களா.

பின்னர் உங்களுக்குள்ள உரிமைகளை சட்டத்தரணி விளக்குவார். எந்த சூழ்நிலையில் உங்களுக்கும் வீட்டில் உங்களுக்குள்ள பங்குக்கும் பிரச்சினை வரும் என்று கோடிட்டுகாட்டுவார். அம்மாதிரியான பிரச்சினைகளைத் தவிர்க்க நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவார்.

சட்டத்தரணி ஒரு சமயத்தில் உங்களில் ஒருவருக்காக மட்டுமே செயலாற்ற முடியும் என்பதை நினைவில் கொள்க. நீங்கள் இருவரும் விரும்பினாலும்கூட உங்களிருவருக்காகவும் அவர் செயலாற்ற முடியாது.

## பரிசீலிக்கவேண்டிய விடயங்கள்

சட்டத்தரணி உங்களுடன் கலந்துபேசுகின்ற சில சட்டபூர்வ விடயங்கள் பின்வருமாறு:

### வீட்டின் உரிமை

ஒருவரோடு சேர்ந்து வாழத் துவங்குகிறீர்கள், ஆனால் அந்த வீடு அவர் பெயரில்தான் இருக்கிறது என்றால் அந்த வீட்டை விற்றுக் கிடைக்கும் பணத்தில் சாதாரணமாக நீங்கள் உரிமை கோர முடியாது. அப்படி கோர வேண்டுமானால் பின்வரும் விஷயங்களை நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

- அந்த வீட்டுக்கான உத்திரவாதத் தொகையிலும், வீட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும் நீங்கள் பங்களிப்பு செய்துள்ளீர்கள்; அல்லது
- அந்த வீட்டில் உங்களுக்குப் பங்கு இருக்கிறது என்று ஏற்பட்ட உடன்பாடு காரணமாக அந்த வீட்டுக்காக நீங்கள் செலவு செய்துள்ளீர்கள் (உதாரணத்துக்கு, வீட்டில் ஏதும் பெரிய மேம்பாட்டு வேலையை அல்லது பழுதுபார்ப்பு வேலைக்கு நீங்கள் பணம் கொடுத்தது போன்றவை).

வீடு உங்கள் பேரில் இல்லை என்ற நிலையில் சேர்ந்து வாழ்பவர் உங்களை வெளியேறச் சொல்லும்போது உங்களுக்கு அங்கே தொடர்ந்து இருக்க உரிமை இல்லை.

உங்கள் இருவர் பேரிலுமே வீடு இல்லை என்ற பட்சத்தில், சேர்ந்து வாழ்பவர் இறந்த பின்னர் அவ்வீட்டின் மீது நீங்கள் உரிமை கோர முடியாது. அப்படி உரிமை கோர சேர்ந்து வாழ்பவர் அதற்கான உயில் எழுதி வைத்திருக்க வேண்டும். உயில் இல்லாத பட்சத்தில், இறந்தவரின் சொத்துக்கு உரிமை கோரி நீதிமன்றத்தில் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்டு நீங்கள் அவருடன் வாழ்ந்திருந்தாலோ அல்லது பொருளாதார ரீதியில் சேர்ந்து வாழ்ந்தவரைச் சார்ந்திருந்தீர்கள் என்றாலோதான் , இப்படி நீங்கள் உரிமை கோரி விண்ணப்பிக்க முடியும்.

சேர்ந்து வாழ்பவரின் பெயரிலிருந்து உங்கள் இருவரது பெயருக்குமாக வீட்டை மாற்றி எழுதச் சொல்லி சட்டத்தரணி பரிந்துரைக்கலாம். 'ஜாய்ண்ட் டெனண்ட்ஸ்' என்றோ அல்லது 'டெனண்ட்ஸ் இன் காமன்' என்ற வகையிலோ சட்டத்தரணி மாற்றச்சொல்லலாம். ஜாய்ண்ட் டெனண்ட்ஸ் என்று இருக்கும்பட்சத்தில், அந்த வீட்டை விற்கும்போது விலையில் 50% உங்களுக்கு வரும். அந்தச் சூழலில் ஒருவர் இறக்கிறார் என்றால், உயிலில் எப்படி எழுதியிருப்பினும், மற்றவர் தானாகவே அந்த வீடு முழுமைக்கும் உரிமையாளர் ஆகிவிடுவார்.

ஆனால் டெனண்ட்ஸ் இன் காமன் என்று இருக்கும்போது, வீட்டில் உங்களது பங்கு என்னவோ அதற்கு மட்டுமே உங்களுக்கு உரிமை உண்டு. டெனண்ட்ஸ் இன் காமன் முறையில், வீட்டில் உங்களுக்குள்ள பங்கு என்ன என்பதை ஒரு சட்டத்தரணியைக் கொண்டு 'நம்பிக்கை ஒப்பந்தம்' ஒன்றை வரைந்து நீங்கள் தீர்மானித்துக்கொள்ளலாம். உங்களில் ஒருவர் இறக்கும்போது உங்களுடைய பங்கை மற்றவருக்குக் கொடுக்க நினைத்தால் அதற்கு நீங்கள் ஒரு உயில் எழுதிவைக்கவேண்டும்.

### சேர்ந்து வீடு வாடகைக்கு எடுப்பது

சேர்ந்து வீடு வாடகைக்கு எடுத்திருந்தீர்களானால், இருவரின் பெயரிலுமாக வாடகை ஒப்பந்தத்தைப் பெற்றிருப்பது நல்லது.

### பிள்ளைகள்

சேர்ந்து வாழ்பவருக்கும் உங்களுக்குமாக பிறந்த பிள்ளைகள் இருந்தால், பிள்ளையின் குடும்பப் பெயர் என்னவாக இருக்கும் என்பதையும் பிறப்பை எவ்வாறு பதிவு செய்வது என்பதையும் நீங்கள் தீர்மானிக்க வேண்டும். பிள்ளைக்குத் தேர்ந்தெடுக்கும் குடும்பப் பெயர் என்ன என்று முடிவுசெய்வது உங்களுக்கும் உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கும் இடையிலான முடிவுதான். நீங்கள் இருவருமாக சேர்ந்தே பிள்ளையின் பிறப்பைப் பதிவுசெய்யலாம்.

திருமணம் செய்யாமல் இருவர் சேர்ந்து வாழும்பொழுது அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைக்கான பொறுப்பு சாதாரணமாக தாயைத்தான் சேரும். ஆனால் 1 டிசம்பர் 2003 முதல், பிள்ளையின் பிறந்த பதிவில் தந்தையின் பெயரும் பதிவாகியிருந்தால், பிள்ளையின் பொறுப்பு அவருக்கும் உண்டு என்றாகியுள்ளது. மாறாக பிள்ளைக்கான பொறுப்பை சேர்ந்து வாழ்பவருடன் நீங்கள் பகிர்ந்துகொள்ளும் வகையில் சட்டத்தரணியைக் கொண்டு உடன்பாடு ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம். சேர்ந்து வாழ்பவரை பிற்பாடு நீங்கள் பிரிய நேர்கிறது என்கிறபோது இது முக்கியமாகும்.

வேறு ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்தபோது பிறந்த குழந்தை உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கு இருக்கிறது என்றால், பெற்றவர் என்ற நிலையிலிருந்து அந்தக் பிள்ளைக்கான பொறுப்பு உங்களை எப்போதுமே சேராது. இது பற்றி சட்டத்தரணி உங்களுக்கு விளக்குவார்.

### பிரிந்து செல்லும்போது பிள்ளைகளின் நிலை

சேர்ந்து வாழ்பவரும் நீங்களும் பிரிகிறீர்கள், உங்களிருவருக்குமாகப் பிறந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால், குழந்தைகள் உதவி நிறுவனத்திடம் நீங்கள் விண்ணப்பித்து பிள்ளை வளர்ப்பு உதவித் தொகைகளைப் பெறலாம். மற்ற வகையிலான பொருளாதார உதவிகள் கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். முடிந்த அளவு சீக்கிரம் சட்டத்தரணியுடன் நீங்கள் விவாதிக்க வேண்டிய விடயம் இது.

# வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கு தேவையான உதவிகள் பற்றிய வழிகாட்டி

The Law Society

**நெருங்கிய உறவினர் தகுதி**

உங்களோடு சேர்ந்து வாழ்பவர் நோய்வாய்ப்படுகிறார் அல்லது இறந்துபோகிறார் என்ற சூழ்நிலையில் மருத்துவத்துறை நோக்கில் ஆக நெருங்கிய உறவினர் என்பவராக நீங்கள் இருக்கமாட்டீர்கள். நீங்கள் இருவருமாக உடன்பட்டு அதற்கென ஒப்பந்தம் செய்திருந்தால்தான் அது நடக்கும். இதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் சட்டத்தரணி உதவுவார்.

**வங்கிக் கணக்கு**

உங்களுக்கும் உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கும் தனித்தனியான வங்கிக் கணக்குகள் இருந்தால், அவருடைய கணக்கில் உள்ள பணத்தை நீங்கள் பயன்படுத்த இயலாது. அவர் இறந்துவிடும் பட்சத்தில், அவர் வங்கிக் கணக்கில் இருக்கும் பணம் அவர் விட்டுச் செல்லும் சொத்து மற்றும் உடைமைகளின் அங்கமாகிவிடும். சாதகமான உயில் இல்லாத நிலையில், தானாகவே அந்தப் பணம் உங்களுக்கு வந்து சேராது என்பது இதன் பொருள்.

இதற்கு ஒரு தீர்வு, இருவருமாக சேர்ந்து கூட்டு வங்கிக் கணக்கை வைத்துக்கொள்வது. அப்படியிருக்கும்போது உங்களோடு சேர்ந்து வாழ்பவர் இறக்கிறார் என்றால் அந்தக் கணக்கில் உள்ள எல்லாப் பணமும் உடனடியாகவே உங்களுடையதாகிவிடும்.

**வரி செலுத்துதல் தொடர்பான நிலை**

திருமணம் செய்து அல்லது முறைப்படி பதிவுசெய்து சேர்ந்து வாழும் ஜோடிகளுக்கு உள்ள வரிச் சலுகைகள் மற்றும் உதவிகள் உங்களுக்கோ சேர்ந்து வாழ்பவருக்கோ இருக்காது, குறிப்பாக சொத்திலிருந்து கிடைக்கும் பணம் மீதான வரி அல்லது வாரிசு உரிமை வரி போன்றவற்றில் இருக்காது. உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கு பெரிய சொத்து அல்லது பொருளை நீங்கள் கொடுக்க விரும்பினால் அதற்கு நீங்கள் வரி செலுத்த வேண்டும். ஆனால் திருமணம் செய்து அல்லது முறைப்படி பதிவுசெய்து சேர்ந்து வாழ்பவர்களுக்கு இந்த வரி செலுத்தத் தேவையில்லை.

**ஓய்வூதியத் திட்டங்கள்**

நீங்கள் இறக்கும்பட்சத்தில் உங்களுக்கான அரசு ஓய்வூதியம் தானாகவே உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கு வழங்கப்பட மாட்டாது. நிறுவன மற்றும் தனியார் ஓய்வூதியங்களைப் பொறுத்தமட்டில் வெவ்வேறு விதிமுறைகள் உண்டு. உங்களுக்கும் உங்களோடு சேர்ந்து வாழ்பவருக்கும் எந்த அளவுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்பதை சட்டத்தரணியுடன் சேர்ந்து கவனமாகப் பரிசீலிப்பது நல்லது.

**உயில் எழுதிவைப்பது**

உங்களுடைய சொத்துகள் எவை, உங்களுடன் சேர்ந்து வாழ்பவரது எவை என்று தனித்தனியாக சொல்லிவைக்க ஒரு உயில் எழுதிவைப்பது நல்ல வழி. உயில் எழுதிவைக்காமல் நீங்கள் இறந்துவிடுகிறீர்கள் என்றால், உங்கள் சொத்துகளில் ஒரு பங்கு தானாகவே உங்களோடு சேர்ந்து வாழ்ந்தவருக்குப் போய்ச் சேராது, ஆகவே அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் உங்கள் சொத்து போய்ச் சேரவேண்டும் என்றால் நீங்கள் உயில் அவசியம்.

**சேர்ந்து வாழ்தல் தொடர்பான ஒப்பந்தங்கள்**

ஒரு ஜோடியின் நிதி மற்றும் பிற ஏற்பாடுகளைத் ஊர்ஜிதம் செய்துகொள்ள இப்படியான ஒப்பந்தங்கள் எழுதிவைப்பது சிறந்த வழி என்ற நிலை மெதுமெதுவாக உருவாகிவருகிறது. சேர்ந்து வாழும்போதும், பிரிந்து செல்கையிலும், ஒருவர் இறந்துவிட்டாலும், ஒருவர் மற்றவரிடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன என்று முதலிலேயே இந்த ஒப்பந்தங்கள் தெளிவுபடுத்துகின்றன. நாமாகவே மதித்து நடக்கவேண்டிய ஒப்பந்தங்கள் அவை. அதாவது அவற்றின் எல்லா பிரிவுகளையும் சட்டப்படி நீதிமன்றங்கள் மூலம் பின்பற்றவைக்க முடியும் என்று கிடையாது. ஆனாலும் கருத்துப் பிளவுகள், உடன்பாடற்ற விஷயங்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதிலும், மன உளைச்சலைக் குறைப்பதிலும் இவை நிச்சயம் உதவுகின்றன.

இப்படியான ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கு முன்னர் நீங்களும் உங்களோடு சேர்ந்து வாழ்பவரும் தனித்தனியாக சட்ட ஆலோசனையைப் பெறவேண்டும்.

**உடன்பாடற்ற விடயங்கள்**

உறவு முறிந்துபோகும் நிலை, சேர்ந்து வாழ்பவர் இறந்துவிடுகிறார் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை வரும் வரையில் பெரும்பாலான ஜோடிகள் சட்ட ஆலோசனையைப் பெறுவதில்லை என்பதே இதில் வருந்தத்தக்க விடயம். பிரச்சினை முற்றிய பின்னர் அதனை சுலபமாக தீர்ப்பதென்பது அரிதான விடயம். ஆனாலும் உங்களின் நலன்களைக் காப்பாற்றும் அறிவும் அனுபவமும் சட்டத்தரணிக்கு உண்டு. உங்களுடைய உரிமைகள் என்ன என்று வெறுமனே தெரிந்துகொள்வதானாலும் சரி அல்லது உங்கள் பிள்ளைகள் சம்பந்தமான சிக்கலான பிரச்சினைகளென்றாலும் சரி சட்ட வரையறைக்குட்பட்டு உங்களுக்கு அதிக நன்மை பயக்கும் தீர்வு எது என்று கண்டறிவதில் சட்டத்தரணி உதவுவார்.

## செலவுகள்

சட்டத்தரணியைப் பொறுத்து கட்டணம் மாறுபடும். பின்வருவனவற்றைப் பொறுத்தும் கட்டணம் மாறுபடும்:

- சட்டத்தரணியின் அனுபவம் மற்றும் தகவல் அறிவு;
- அவர் எவ்வகையான சேவை வழங்குகிறார் என்பது; மற்றும்
- ஏதும் ஒப்பந்தங்களை வரைய வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பது.

யாரைப் பயன்படுத்துவது என்று முடிவுசெய்வதற்கு முன், உங்கள் வட்டாரத்தின் சில சட்டத்தரணிகளிடம் அவர்கள் எவ்வளவு கட்டணம் பெறுகிறார்கள் என்று தெரிந்துகொள்ளவும். ஆனால் கட்டணத்தின் அளவை மட்டும் வைத்து ஆளை முடிவுசெய்யாதீர்கள். நீங்கள் எளிதில் அணுகக்கூடிய, நீங்கள் புரிந்துகொள்ளும்படியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களை நியமிப்பதென்பதும் அதே அளவு முக்கியம்.

உங்களது வருமானம் குறைவாக இருக்கிறது அல்லது நீங்கள் அரசாங்க உதவித்தொகையைக் கொண்டு வாழ்கிறீர்கள் என்றால் இலவச சட்ட ஆலோசனை மற்றும் உதவிகள் உங்களுக்குக் கிடைக்கலாம். அவ்வுதவிகள் உங்களுக்குக் கிடைக்குமா என்பதை சட்டத்தரணி உங்களுக்குச் சொல்லுவார்.

## கூடுதல் தகவல்

சட்டத்தரணிகள் வழங்கக்கூடிய பொதுவான சேவைகள் பற்றிய பிரசுர வரிசையில் ஒன்று இது. இந்த வரிசையிலுள்ள மற்ற பிரசுரங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது. உங்களது சட்டத்தரணியிடம் இருந்தும் அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்சுக்கான சட்ட சங்கத்தை 0870 3333 084 என்ற இலக்கத்தில் அழைத்தும் நீங்கள் இவற்றைப் பெறலாம்.

- உயில் எழுதுவதற்கான வழிகாட்டி
- வீடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- விவாகரத்து பெறுவதற்கான வழிகாட்டி
- வேலையிடப் பிரச்சினைகள் குறித்த உங்கள் வழிகாட்டி
- தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி
- அடிபட்டதற்கு நஷ்டஈடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- வயோதிகர்களின் நிதி விவகாரங்கள் குறித்த உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு விடுவதற்கான உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு எடுப்பதற்கான உங்கள் வழிகாட்டி
- சட்டத்தரணி ஒருவரைப் நீங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி
- 'ப்ரொபேட்' எனப்படும் உயிலுக்கான நீதிமன்ற அங்கீகாரம் பெறுவதற்கான உங்கள் வழிகாட்டி
- தஞ்சம் கோருவதற்கான உங்கள் வழிகாட்டி

**பெரிய எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப்பட்ட வடிவிலும், பார்வையற்றோர் படித்து அறியக்கூடிய பிரெய்லி எழுத்து வடிவிலும், குறுந்தகடு வடிவிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். இதில் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்றால் accessibility@lawsociety.org.uk என்ற மின் -அஞ்சல் முகவரியையோ அல்லது 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளவும்.**

**வேறு பல மொழிகளிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். www.lawsociety.org.uk என்ற எங்கள் இணைய தளத்திற்குச் சென்று நீங்கள் அவற்றைப் பெறலாம்.**

Lexcel

Look for Lexcel - the mark of excellence

The Law Society 113 Chancery Lane London WC2A 1PL தொலைபேசி: 020 7242 1222 www.lawsociety.org.uk

துல்லியமான விபரங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்றாலும், சட்டம் என்பது தொடர்ந்தும் மாறிவருகிறது, ஒவ்வொருத்தருக்கும் அது வெவ்வேறு வகையில் பொருந்துகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட ஆலோசனைக்கு எதுவும் ஈடாகாது. ஆகவே இந்தப் பிரசுரத்தை மட்டும் நீங்கள் சார்ந்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

Designed by dmlmarketing.co.uk Version 2, 2007 Your guide to setting up home with your partner - Tamil